# றிக்கோலாஃப் வான்கோயன்ஸ் (Ryckloff Vangoens) காலத்தில் சைவசமயநிலை: ஒல்லாந்த அறிக்கைகளைக் அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**டினோசா சுஜீந்தர்[1], சாந்தினி அருளானந்தம்[2]**

## ஆய்வுச்சுருக்கம்:

*இலங்கையின் நவீன வரலாற்றில் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தர்கள் கி.பி 1658 – 1796 வரையான காலப்பகுதியில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். இவர்கள் இலங்கையின் கரையோரப் பிராந்தியங்களை கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் என மூன்று 'கொமாண்டரி'களாக (Commandry) வகுத்து நிர்வாகத்தை மேற்கொண்டனர். இந்த நிர்வாக ஒழுங்குமுறையில் ஆளுநர்களின் பங்களிப்பு பிரதானமானது. இலங்கையில் மூன்றுமுறை ஆளுநராக இருந்த 'றிக்லோ.'.ப் வான்கோயன்ஸ்' **(Ryckloff Vangoens)** (1660-1661, 1663, 1664-1675) காலத்தில் யாழ்ப்பாணக் 'கொமாண்டரி'யானது தனித்துவமான பிராந்தியமாக விளங்கியதுடன், அவரது நிர்வாகத்தின் கீழ் அதன் அரசியல், பொருளாதார, சமய, சமூக ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தைப் போலவே ஒல்லாந்தர்களது ஆட்சிக்காலத்திலும் சைவசமயமானது பல சவால்களை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. ஒல்லாந்தரது புரட்டஸ்தாந்து சமயக்கொள்கையை இப்பிராந்தியத்தில் நிலைப்படுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் சைவசமயப் பண்பாடு தளர்வடையக் காரணமாக இருந்தன. ஒல்லாந்தரின் மதக்கொள்கைகளை நிலைநாட்டுவதில் போர்த்துக்கேயரால் பரப்பப்பட்ட கத்தோலிக்கமதமும் சுதேச சமயங்களும் தடையாகக் காணப்பட்டன. ஆயினும் ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க சமயத்தின் மேல் காட்டிய இறுக்கமான கொள்கைகளைச் சைவசமயத்தின் மீது பிரயோகிக்கவில்லை. குறிப்பாக வான்கோயன்ஸின் நிர்வாகத்தில் சைவசமயம் தொடர்பாகச் சற்று நெகிழ்வான போக்கு கடைப்பிடிக்கப்பட்டதை காணமுடிகின்றது. இப்பின்னணியில் யாழ்ப்பாணக் 'கொமாண்டரி'யில் ஆளுநர் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமயத்தின் நிலை யைக் கண்டறியும் நோக்குடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி வரலாற்று அணுகுமுறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது. முதலாம் நிலைத்தரவுகளான வான்கோயன்ஸினால் வெளியிடப்பட்ட டச்சுஆவணங்கள், அறிக்கைகள், மேலாணைகள், குறிப்புக்கள், கடிதங்கள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக அவ்விடயம் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆய்வினை மேற்கொள்வதன் மூலம் வான்கோயன்ஸின் நிர்வாக நடவடிக்கையில் கடைப்பிடிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து மதக்கொள்கைகள் சைவசமயத்தவர்களுக்கு எத்தகைய நிலையைத் தோற்றுவித்தன என்பது தொடர்பிலும் அக்கொள்கைகளினால் சைவசமயத்தவர் களுக்கு ஏற்பட்ட சாதக, பாதக அம்சங்கள் தொடர்பிலும் அறிந்துகொள்ளலாம்.*

**திறவுச்சொற்கள்:** யாழ்ப்பாணக் கொமாண்டரி, ஒல்லாந்தராட்சி, ஆளுநர் வான்கோயன்ஸ், சமயக் கொள்கைகள், சைவசமயம்.

[1]*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
dinosha14@hotmail.com
[2]*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
mathushanthini@yahoo.com

## ஆய்வின் அறிமுகம்

இலங்கையில் ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஐரோப்பியர்களுள் ஒல்லாந்தர் ஏறக்குறைய 138 வருடங்கள் அதனை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆள்புலங்களில் இலங்கைத்தீவு விலைமதிப்புமிக்க மாணிக்கமாக கருதப்பட்டதுடன், இலங்கையில் காணப்பட்ட மூன்று கொமாண்டரிகளுள் யாழ்ப்பாணக் கொமாண்டரி ஒரு முக்கியமான பிராந்தியமாக ஒல்லாந்த ஆளுநர்களினால் கவனத்திற் கொள்ளப்பட்டது. ஒல்லாந்த ஆளுநர்களுள் இலங்கையை மூன்றுமுறை ஆட்சிசெய்த ஆளுநர் றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் இனுடைய ஆட்சி யாழ்ப்பாணக் கொமாண்டரி வரலாற்றில் மட்டுமல்லாமல் இலங்கை வரலாற்றிலும் பிரதானமாகக் கருதப்படுகின்றது. றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் இற்கும் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்கும் கிட்டத்தட்ட 17ஆண்டுகள் தொடர்பு காணப்படுகின்றன. இவரின் அறிக்கைகள் பலவற்றினுள் யாழ்ப்பாணக் கொமாண்டரி தொடர்பாக பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. கி.பி1658 –1675 வரையிலான இவரது நிர்வாகக் காலப்பகுதியினுள் ஒல்லாந்தருடைய ஆட்சியை இலங்கையில் நிலைக்கச் செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மக்களைச் சுமூகமான நிர்வாகத்தின் மூலம் வழிநடத்துவதும், அவர்களின் விருப்பத்துடன் சமய நடவடிக்கைகளில் ஈடுபடவும் இவருடைய அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு இவரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையினால் போர்த்துக்கேயர் காலத்தில் காணப்பட்ட யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சைவசமயநிலைமை ஓரளவுக்கு சீரமைக்கப்பட்டது எனலாம். சைவசமய நிலைமை றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் காலத்தில் எவ்வாறு காணப்பட்டது என்பது தொடர்பிலும் இவரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாழ்ப்பாணக் கொமாண்டரியின் சைவசமய பண்பாட்டு வளர்ச்சி நிலைக்குச் எவ்வாறு சாதமாக அமைந்திருந்தது என்பது தொடர்பிலும் இவ்வாய்வில் ஆராயப்படுகின்றது.அதாவது போர்த்துக்கேயர் காலத்தில் காணப்பட்ட சுதந்திரம் இல்லாத சமய நிலைமை ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவிற்குத் தளர்வாக இருந்தது. அத்துடன் இவருடைய காலத்தில் சைவசமயத்தைப் பின்பற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் காணப்பட்டது.

## ஆய்வின் நோக்கம்

ஆளுநர் றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலை தொடர்பில் இதுவரையில் விரிவான ஆய்வுகள் முன்வைக்கப்படவில்லை. எனவே இக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்குடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலைமைகளை ஆராயும்பொருட்டு பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

1. போர்த்துக்கேயர் காலத்தில் சைவசமயநிலைமையை அறிதல்
2. வான்கோயன்ஸ் ஆட்சிக்காலத்தில் சைவசமய நிலையை மதிப்பிடுதல்

3. றிக்லோ∴ப் வான்கோயன்ஸ் இனால் கடைப்பிடிக்கப்பட்ட சமயக் கொள்கைகளை வெளிப்படுத்தல்

போன்ற நோக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்ப்படுகின்றது.

## ஆய்வின் கருதுகோள்

ஆளுநர் வான்கோயன்ஸ் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து மதக்கொள்கைகள் சைவசமயத்தவர்மீது இறுக்கமான நடைமுறையை பிரயோகிக்கவில்லை, இதற்குப் பின்னணியாக இருந்தது யாழ்ப்பாணக் கொமாண்டரியில் கிடைக்கப்பெற்ற பொருளாதார இலாபமாகும் என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## ஆய்வின் மூலங்கள்

றிக்லோ∴ப் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலைமை தொடர்பில் அறிந்துகொள்வதற்கு பல்வேறு இலக்கியங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. ஒல்லாந்தர் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து சமயக்கொள்கைகள் தொடர்பாக பல அறிஞர்களால் தமிழ், ஆங்கில மொழிகளில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனினும் றிக்லோ∴ப் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலைதொடர்பில் விரிவான ஆய்வுகள் இதுவரை முன்னெடுக்கப்படாத காரணத்தினால் இவ்வாய்வின் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்விற்காக பயன்படுத்தப்படுகின்ற இலக்கியங்களுள் வான்கோயன்சினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளுள் குறிப்பாக Vangoens to Governor General and Council (1658), Governor General Council to its Governor and Council of Ceylon (1658–1665), Memoirs of Vangoens, memoir of Hendricks Zwaadekroon உள்ளிட்ட டச்சு அறிக்கைகள் இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் தவிர பிலிப்பு பால்டேயஸ் அவர்களினுடைய ‘‘இலங்கைத் தீவின் உண்மையான நிச்சயமான வருணனை’’ எனும் நூலின் மூலம் புரட்டஸ்தாந்து சமயம் இலங்கை வரலாற்றில் பெறும் முக்கியத்துவம் தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து மதம் பரவலடையச் செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான சில தரவுகள் பெறப்பட்டுள்ளன.

Dr. Tikiri Abeyasinghe வின் Jaffna Under the Portuguese எனும் நூலில் வான்கோயன்ஸ் இன் ஆட்சிக்கு முன் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமயநிலை தொடர்பாக அறியமுடிகின்றது. இந்நூல்களைத் தவிர முருகர்குணசிங்கம் அவர்களினுடைய இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு எனும் நூலிலும், பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின்

இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும் எனும் நூலிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்கால நிர்வாக அம்சங்கள் தொடர்பாகவும், யாழ்ப்பாணச் சமூகவழமைகள் தொடர்பாகவும் பல்வேறு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி வரலாற்று அணுகுமுறையுடன் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாம்நிலைத் தரவுகளான வான்கோயன்ஸ் இனால் வெளியிடப்பட்ட டச்சுஆவணங்கள் (அறிக்கைகள், குறிப்புக்கள், கடிதங்கள், மேலாணைகள்) போன்றன பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஐரோப்பியர் காலத்தில் சைவசமய நிலைமை, ஒல்லாந்தரினால் கடைப்பிடிக்கப்பட்ட சமயக்கொள்கைகள் போன்ற விடயங்கள் சேகரிக்கப்பட்டு அத்தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வினை நியாயப்படுத்தலும்**

இவ்வாய்வினை முன்னெடுப்பதற்கான மூல ஆதாரங்கள் டச்சுமொழியில் காணப்படுகின்றன. ஏனெனில் ஒல்லாந்தர் காலத்தில் ஆளுநர்களால் வெளியிடப்பட்ட ஆவணங்கள் பெரும்பாலானவை டச்சுமொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளன. எனவே ஆளுநர் வான்கோயன்ஸ் காலத்தில் வெளியிடப்பட்ட ஆவணங்களைப் பெற்று அவ் ஆவணங்களை மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டிய தேவை இவ் ஆய்வுக்குண்டு. அத்துடன் யாழ்ப்பாணக் கொமாண்டரியில் ஒல்லாந்த ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சமயம் தொடர்பாக இவர்களது கொள்கைகள், முன்னைய காலப்பகுதியை (போர்த்துக்கேயர்) விட ஓரளவிற்கு சுதந்திரத்தன்மையுடன் காணப்பட்டது. இதனால் சுதேச சமய நிலை புத்துயிர்பெற்றது. இதன்விளைவால் ஒல்லாந்தர் காலத்தில் சைவசமய நூல்கள், சைவசமய ஆலயங்கள் போன்றன வளர்ச்சியடைக் காரணமாயின. இத்தகைய வளர்ச்சிநிலை ஒவ்வொரு ஆளுநர்களின் காலத்திலும் எவ்வாறு காணப்பட்டது என்பது தொடர்பாக விரிவான ஆய்வுகள் இதுவரையில் பெரிதளவாக முன்னெடுக்கப்படவில்லை. எனவே ஆளுநர் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலை தொடர்பில் அறிவதற்கும், அந்நிலையால் ஐரோப்பிய காலனித்துவத்தின்கீழ் சைவசமய வளர்ச்சி நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக விரிவாக அறிந்துகொள்வதற்கு இவ்வாய்வினை விரிவாக ஆராய வேண்டும்.

**ஆய்வின் எல்லை**

நிக்லோ.்.ப் வான்கோயன்ஸ் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று கொமாண்டரியின் நிர்வாகத் தலைவராக விளங்கினாலும் இவ்வாய்வானது ஒல்லாந்தர் காலத்தில் வான்கோயன்ஸ் இன் சமயக்கொள்கை யாழ்ப்பாணக் கொமாண்டரியில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தியது என்பதனை அறிந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. எனவே இவ்வாய்வானது யாழ்ப்பாணக் கொமாண்டரியை எல்லையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வுப் பகுப்பு**

இலங்கையில் நிலைபெற்று விளங்குகின்ற சமய மரபுகளில் சைவசமயமே மிகப்பழமையானது (பத்மநாதன்,சி., 2000:03). இலங்கை வரலாற்றில் புராதனகாலம் தொடக்கம் தற்காலம் வரை சைவசமயப் பண்பாடானது பல்வேறு சூழ்நிலைகளைக் கடந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. சைவசமயத்தின் தொன்மையைப் பழம்பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புக்கள், தொல்பொருட்கள், அகழ்வாராய்ச்சிகள் போன்றவற்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இலங்கைத்தமிழரிடையே சைவசமயமானது மிகப்பழையகாலத்திலிருந்து சிறப்புடன் விளங்கியதை பெருங்கற்கால சின்னங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அச்சின்னங்கள் வெளிப்படுத்தும் அம்சங்களின் அடிப்படையில் அப்பண்பாட்டு மக்களது வாழ்வியலை விளங்கிக்கொள்ள முடிகின்றது. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானுடைய வழிபாடு மிகத்தொன்மையான வழிபாடாக விளங்கியதுடன் அவ் வழிபாட்டினை பல தொல்லியல் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகின்றது. சுடுமண்ணாலான இலிங்கவடிவங்கள், காளையின் உருவங்கள், மட்பாண்டங்களின் காணப்படும் இருதலை, முத்தலைச் சூலங்கள் போன்றவை யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் மூலாதாரங்களாக விளங்குகின்றன.

சிவவழிபாட்டுடன், முருகவழிபாடும் காணப்பட்டமைக்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன. காலத்தால் மிகப்பழைய பெருங்கற்காலச் சின்னங்களில் முருக வழிபாட்டுக்குரிய தடயங்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரின் தாழிக்காட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களை ஒத்த சின்னங்கள் இலங்கையில் பல பாகங்களிலும் குறிப்பாக, கந்தரோடை, பொம்பரிப்பு போன்ற இடங்களில் (வேல்சின்னங்கள்)கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது (சிற்றம்பலம்,சி.க.,1996:182). இத்தகைய தொல்பொருட்சான்றுகள் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் ஆரம்பகாலம் முதல் வேரூன்றி இருந்தமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. சிவவழிபாடு, முருக வழிபாடு,

அம்மன் வழிபாடு, விஷ்ணு வழிபாடு மற்றும் ஏனைய வழிபாடுகள் போன்றவற்றினூடாக யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் நீண்டகாலமாக சைவசமயத்தைப் பின்பற்றி வந்தமையை அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் பெருங்கற்காலம் தொடக்கம் ஐரோப்பியர் காலம் வரை பின்பற்றப்பட்டிருந்த சைவசமயம் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் அவர்களால் பின்பற்றப்பட்ட சமயக்கொள்கையால் தளர்வடைந்தது. இத்தளர்வுநிலையானது சைவவமயத்தவர்களுக்கு பெரும் சவாலை ஏற்படுத்தியதுடன் அச்சவாலில் இருந்து தமது சமயத்தினைப் பாதுகாப்பதற்கு பல்வேறு முயற்சிகளை சைவசமயத்தவர் முன்னெடுக்க வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வாய்வில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவசமயமானது எத்தகைய நிலையில் இருந்தது என்பது தொடர்பில் ஆராய்வது அவசியமாகும்.

**போர்த்துக்கேயர் காலத்தில் சைவசமயம்**

போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க சமயம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணச் சமயநிலையில் பலமாறுதல்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இக்காலம் சைவசமயப் பண்பாட்டு வளர்ச்சியில் தளர்வுக்காலம் என்று அழைப்பது பொருத்தமானதாகும். போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது சுதேச சமயங்கள் (இந்து, பௌத்த) பற்றி அறியாதவராகவே இருந்தனர். இவ்விரு சமயங்களின் வழிபாட்டு முறைகளையும் இழிவாகக் கருதிய போர்த்துக்கேயர் இலங்கையரை “அஞ்ஞானிகள்” என அழைத்ததுடன் அம்மதத்தவர்களையும் தமது மதத்திற்குள் சேர்த்துக்கொள்வது அவசியம் எனக் கருதிய இவர்கள் கத்தோலிக்க சமயக்கொள்கையைச் சுதேச சமயத்தவர்கள் மீது இறுக்கமான வழிமுறைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் கடைப்பிடித்த கத்தோலிக்க சமயக்கொள்கையினால் சைவசமயிகள் தமது சமயத்தைக் கடைப்பிடிக்க முடியாதநிலை தோன்றியது. “போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில், சைவக்கோயில்கள் பெருந்தொகையில் அழிக்கப்பட்டதுடன் மக்களை கத்தோலிக்கராக மாற்றுவதற்கும் போர்த்துக்கேயர் மேற்கொண்ட ஆக்கிரமிப்பும் சைவர்களிற்கு எதிரான பிரசார நடவடிக்கைகளும் சைவசமயத்தவரிடையே கடும் எதிர்பார்ப்பைச் சம்பாதித்தன” (Raymond Schwab, 1925:12) என்ற கூற்றிலிருந்து அறியலாம்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சமயக் கொள்கைகள் சுதேச சமயங்களுக்கு எதிராகவே காணப்பட்டன. இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் சிறப்புடன் விளங்கிய பல ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் சூறையாடப்பட்டன. ஆலய விக்கிரகங்களை உருக்கி மணிகளைச் செய்தனர். இடிக்கப்பட்ட ஆலய கற்களைக் கொண்டு கோட்டைகள் கட்டப்பட்டன. முதலியார்

இராசநாயகம் அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் சீதாவாக்கையில் அமையப்பெற்ற பெரெண்டி கோயில் 1553இலும் முன்னேச்சரம் 1575இலும் விஷ்ணுகோயில் 1588இலும் திருக்கோணேச்சரம் 1622இலும் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார் (இராசநாயகம்.செ., 2003:80). இவ்வாலயங்கள் போன்றே திருக்கேதீஸ்வரம், நகுலேச்சரம், நல்லூர் கந்தசாமி ஆலயம் போன்றனவும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன (இராசநாயகம்.செ., 2003:81). இவ்விடயங்களை அவதானிக்கும்போது போர்த்துக்கேயரது சமயக்கொள்கையினால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான இடங்களில் சைவசமயப் பண்பாட்டுடன் தொடர்புடைய சின்னங்கள் சிதைக்கப்பட்டமையை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

அரசியலையும் சமயத்தையும் மிக நெருங்கிய தொடர்புடன் அவதானித்த போர்த்துக்கேயரின் இறுக்கமான சமயக்கொள்கையில் அரசியல்ரீதியாக தமக்கு இலாபம் கிடைக்கும் என எண்ணினர். இதனால் அரசியல்ரீதியாக கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராசதானிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து அப்பிராந்தியத்தில் தமது நோக்கங்களைச் செயற்படுத்தும் நடவடிக்கையில் மிகத்தீவிரமாகச் செயற்பட்டனர். குறிப்பாக, யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மிகமுக்கியமான காரணங்களுள் ஒன்றாக விளங்கிய மன்னார் படுகொலைச் சம்பவமானது முதலாம் சங்கிலி மன்னனுக்கும், போர்த்துக்கேயருக்குமான முரண்பட்ட தன்மையின் வெளிப்பாடே ஆகும். 1544ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 600-700 வரையான கிறிஸ்தவர்களை முதலாம் சங்கிலியன் கொன்றதினாலேயே யாழ்ப்பாண இராச்சியம் மீதான படையெடுப்பைப் போர்த்துக்கேயர் துரிதப்படுத்தினர் (TikiriAbeyasinghe, 2005:13). இதனைத்தவிர போர்த்துக்கேயர்களால் யாழ்ப்பாணத்தில் சைவசமயத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அவர்களது சமயக் கொள்கைகளைச் சுதந்திரமாகப் பின்பற்றத் தடையாக இருந்தன. குறிப்பாக சைவசமயத்தவர்கள் புனிதமாகக் கருதிய பசுவை தமது உணவிற்காகத் தரவேண்டும் எனக் கடுமையான நிபந்தனையை போர்த்துக்கேயர் விதித்தனர் (TikiriAbeyasinghe, 2005:14). போர்த்துக்கேயர் காலத்தில் சைவசமயப் பாரம்பரிய அனுட்டானங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை அடக்கி ஒடுக்கப் பலதரப்பட்ட நடவடிக்கைகளைப் போர்த்துக்கேயர் முன்னெடுத்தமையை இதன்மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதனால் சைவசமயிகள் தமது சமய அனுட்டானங்களைப் பின்பற்ற அஞ்சி மறைமுகமாகவே அவற்றைக் கடைப்பிடித்தனர்.

ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது போர்த்துக்கேய தேவாலயங்கள் தவிர 34 இந்துக் கோயில்களும் காணப்பட்டன (வான்கோயன்ஸ், 1661:5) என்ற கருத்தின்படி சைவசமயப்பண்பாட்டுச் சின்னங்களை முற்றுமுழுதாக போர்த்துக்கேயரால் அழிக்க

முடியவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இத்தகைய இறுக்கமானதொரு சூழ்நிலையில் போத்துக்கேயரைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்த ஒல்லாந்தரின் ஆதிக்க காலத்தில் குறிப்பாக ஆளுநர் றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமயநிலை தொடர்பில் ஆராய்வதன் பின்னணியில் அவரது கால சைவசமயத்தின் நிலையை விளங்கிக் கொள்ளலாம்.

## றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் இன் காலத்தில் ஒல்லாந்தரின் சமயக்கொள்கைகள்

ஒல்லாந்தரது சமயக்கொள்கைகளைப் பொறுத்தவரையில் கிழக்கிந்தியத் தீவுகளில் "செமினரி" ஒன்றை அமைத்து அதன்வழி சமயமாற்றத்தினைச் செயற்படுத்த ஒல்லாந்தர் தீர்மானித்தனர். எனினும் இத்தீர்மானம் கி.பி.1690ஆம் ஆண்டளவில் தான் யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்தப்பட்டது. கி.பி.1690ஆம் ஆண்டில் முதலாவது செமினரி யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் 24மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது (Thakshaayini, R., 2017:360). இவ்வாறு தோற்றம்பெற்ற செமினரிகள் மூலம் கிறிஸ்தவ சமயக்கல்வி முன்னெடுக்கப்பட்டது. ஒல்லாந்தர் தமது மதப்பிரச்சார நடவடிக்கைகளையும் புரட்டஸ்தாந்து மதத்தின் குறிக்கோளையும் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பெரிதும் வலுப்படுத்திக் கொள்வதற்கு உபயோகித்த பிரதான கருவி கல்வியாகும் (Hendrick zwaardecroon, 1911:41). இதனடிப்படையில் செமினரி உருவாக்கம் ஒல்லாந்தர் காலத்தில் சமயப்பரப்பும் செயற்திட்டத்தில் பிரதான பங்குவகித்தது எனலாம். இச்செமினரியின் உருவாக்கம் வான்கோயன்ஸ் இன் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் தோற்றம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. வான்கோயன்ஸ் இன் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பின்பற்றப்பட்ட சமயக்கொள்கைகள் தொடர்பாகவும் அக்கொள்கைகள் யாழ்ப்பாணப் பாரம்பரிய சமயநிலையில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாகவும் நோக்குகின்றபோது சைவசமயம் தொடர்பாகவும் அவரின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன எனலாம்.

றிக்லோ.ஃப் வான்கோயன்ஸ் இனது வருகையும் அவரினால் முன்னெடுக்கப்பட்ட யுத்த ரீதியிலான தந்திரோபாயமுமே கி.பி 1658 இல் யாழ்ப்பாணக் கொமாண்டரி ஒல்லாந்தர் வசமாக்குவதற்குக் காரணமாக அமைந்தது. இவரின் ஆற்றலே ஒல்லாந்தருக்கு இலங்கையின் கரையோரம் அனைத்தும் கிடைப்பதற்கு காரணமாகியது. இக்காலத்தில் பின்பற்றப்பட்ட சமயக்கொள்கைகள் சைவசமயத்தின்மீது எத்தகைய நடைமுறையைக் கொண்டிருந்தது என்பதனை முன்னைய காலத்துடன் ஒப்பிட்டு நோக்கலாம். இவர் தாம் கைப்பற்றிய மூன்று கொமாண்டரிகளுள் தனித்துவமான கொமாண்டரியாக யாழ்ப்பாணக் கொமாண்டரியை தெரிவுசெய்தார். அதற்கு வான்கோயன்ஸ் இன் அறிக்கையில் உள்ள குறிப்புக்கள் சான்றாக அமைகின்றன.

‘‘யாழ்ப்பாணம் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாகும். கம்பனியின் நலத்திற்காக அதனைப் பாதுகாக்க வேண்டும். பிற இடங்களைப் போலன்றி இங்கு கம்பனியின் இறையுரிமையென்பது திட்டவட்டமாக ஆட்சேர்பிப்பதற்கு இடமின்றி ஏற்பட்டுள்ளது’’ (VanGoens, 1658:03).

மேற்படி அறிக்கையில் உள்ள குறிப்பின்படி வான்கோயன்ஸ் இன் காலத்தில் யாழ்ப்பாணம் தொடர்பாக ஒல்லாந்தர் கொண்டிருந்த எண்ணம் தெளிவாகின்றது. இவர் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் கவனம் செலுத்துவதற்கு புவியியல் சார்ந்த அம்சங்களும், பொருளாதார நலன்களும் காரணமாக அமைகின்றன. எனினும் புரட்டஸ்தாந்து மதம் தொடர்பான நடவடிக்கையும் இவர் காலத்தில் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதனை விரிவாக ஆராயும்முன் வான்கோயன்ஸ் காலத்தில் யாழ்ப்பாணக் கொமாண்டரியின் சமயக்கொள்கை தொடர்பாக சுருக்கமாக நோக்கலாம்.

வணக்கத்துக்குரிய பிலிப்போல்டயஸ் மேற்கொண்ட ஆரம்பகால முயற்சியின் பயனாக வான்கோயன்ஸ் காலத்தில் சீர்திருத்த கிறிஸ்தவ மதப்பரம்பல் யாழ்ப்பாணக் கொமாண்டரியில் செல்வாக்குப் பெறக் காரணமாயின. பிலிப்போல்டயஸினால் முன்வைக்கப்பட்ட 14 அம்சக் கோரிக்கைகளைத் தனது அறிக்கையில் முன்வைத்த வான்கோயன்ஸ் அதன்படி புரட்டஸ்தாந்து சமயத்தை யாழ்ப்பாணத்தில் பரப்பும் நடவடிக்கையைப் பின்பற்றுமாறு யாழ்ப்பாணக் கொமாண்டருக்கு வலியுறுத்தினார். வான்கோயன்ஸ் தனது கவனத்தை அதிகளவில் கம்பனியின் நலனிலேயே செலுத்தினார். அத்துடன் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்கான சமயப் பொறுப்பு வணக்கத்துக்குரிய பிலிப்போல்டயஸிடம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் வான்கோயன்ஸ் புரட்டஸ்தாந்து சமயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவில்லை என்பது புலனாகின்றது. எனினும் புரட்டஸ்தாந்து சமய மதமாற்றம் இக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.. அத்துடன் ‘‘கட்டாய மதமாற்றம்’’ என்பதனை எதிர்த்த வான்கோயன்ஸ் கட்டாய மதமாற்றம் மூலம் ஒருவர் புரட்டஸ்தாந்து மதத்தில் நீண்டகாலம் நிலைத்திருக்கமாட்டார் என்பதனை நன்கு உணர்ந்து செயற்பட்டார்.

மதமாற்றத்தில் கல்வி மிகப்பெரும் பங்குவகித்தமை குறிப்பிடத்தகது. அத்துடன் பொருளாதார சலுகை, கல்வி உயர்வு, பதவி உயர்வு, சமூக செல்வாக்கு போன்ற அம்சங்களும் மதமாற்றத்திற்காக உபயோகிக்கப்பட்டன. இத்தகைய சமயக்கொள்கைகள் போர்த்துக்கேயரைப்போல மிக இறுக்கமாக காணப்படாததினால் உள்நாட்டு சமயங்கள் ஓரளவிற்கு தன்னிலையுடன் இயங்க முடிந்தது. இதற்கு வான்கோயன்ஸ் இன் அறிக்கையிலிருந்து கிடைக்கின்ற குறிப்புக்கள் சான்றாகின்றன. ‘‘யாழ்ப்பாணத்திலும், அதன் தீவுகளிலும் உள்ள நான்கு மாகாணங்களிலும் வாழும் மக்கள் யாவரும் கிறிஸ்தவர்கள்

ஆயினும் அவர்களில் பலர் இப்போதும் நாகரிகமற்ற மதப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் விருப்பமாக உள்ளனர்'' (VanGoens, 1668 : 05). 1668ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வான்கோயன்ஸின் இவ்வறிக்கையில் யாழ்ப்பாண மக்கள் தமது பூர்வீக மதமான சைவசமயத்தைப் பின்பற்றுவதில் அதிக ஆர்வமாக உள்ளனர் என்பதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இக்குறிப்புக்களின்படி வான்கோயன்ஸ் காலத்தில் பின்பற்றப்பட்டிருந்த சமயக்கொள்கையானது ''மக்களின் சமய, சமூக வாழ்வில் கூடியவரை தலையிடாதிருப்பது'' என்பதாகக் காணப்பட்டது. இத்தகைய ஒரு நிலையால் கிராமப்புறங்களில் சுதேச சமயநிலை மீண்டும் எழுச்சியடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அத்துடன் வான்கோயன்ஸினுடைய அறிக்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் மதம் மாற்றிய பலர் ஒல்லாந்தர் காலத்தொடக்கத்தில் தமது பழைய மதத்துக்குத் திருப்புவதற்காக தன்னிடம் அனுமதி கேட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்புக்கள் போர்த்துக்கேயர் காலத்தில் இடம்பெற்ற கட்டாய மதமாற்றத்தினையும் சுதேசமக்கள் சைவசமயத்தின்மீது வைத்திருந்த அளவற்ற பற்றுநிலையையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன. வான்கோயன்ஸ் இனுடைய ஆட்சிக்காலத்தில் (கி.பி.1660-1675) மடங்கள் எனும் போர்வையின் கீழ் இந்துக்கோயில்கள் இயங்கியதுடன், தனிப்பட்டவர்களின் வளவுகளுக்குள்ளும் சிறிய கோயில்களை மக்கள் உருவாக்கி வணங்கிவந்தனர்.

வான்கோயன்ஸ் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் பொருளாதார இலக்குகளை அடைவதில் அதிக கவனத்தை செலுத்தியதனால் கட்டாய மதமாற்றம் கொள்கையை இறுக்கமாக பின்பற்ற விரும்பவில்லை என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளை அவதானிக்கின்றபோது ஆளுனர் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமயம் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் நிலவியது எனக் கூறலாம். அத்துடன் வான்கோயன்ஸ் இனால் பின்பற்றப்பட்ட சமயக்கொள்கைகள் சைவசமயத்தவர் மீது மிக இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றவில்லை என்பதனையும் மேற்குறிப்பிட்ட ஆதாரங்கள் மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இருப்பினும் வான்கோயன்ஸ் காலத்தில் முழுமையான மதச்சுதந்திரம் சைவசமயத்தவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது பாதகமான அம்சமாகக் காணப்பட்டாலும் முன்னைய காலத்துடன் ஒப்பிடும்போது இறுக்கமான சமயக்கொள்கையை வான்கோயன்ஸ் பிரயோகிக்காதமையினால் யாழ்ப்பாணத்தில் சைவசமயத்தவர்கள் தமது சமயத்தைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கப்பெற்றமை பிரதான விடயமாகும்.

வான்கோயன்ஸ் காலச் சமயக்கொள்கையானது பிற்கால ஆளுநர்களுக்கு முன்னோடியாக இருந்ததுடன், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில்

இந்துசமயக் கோயில்கள் கட்டுவதற்கும் அனுமதி வழங்கவும் சாதகமாக இருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண நகரப்பகுதியில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், நல்லூர் கந்தசாமி கோயில், நீராவியடிப் பிள்ளையார் கோயில் என்பன இவ்வாறு தோற்றம்பெற்ற ஆலயங்களே ஆகும் (Selection from the dutch records). இத்தகைய ஆலயங்களின் தோற்றத்திற்கு ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் அரசபதவியில் இருந்த உள்Wர் நிர்வாகிகளின் செல்வாக்கே பிரதான காரணமாக அமைந்திருந்தது. இக்கோயில்களின் கட்டுமாணமும், இக்காலத்தில் ஏற்பட்ட இலக்கியங்களின் வளர்ச்சி நிலையையும் ஒல்லாந்தர் காலத்தில் சைவசமய வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலை நிலவியது என்பதற்குச் சான்றாக அமைகின்றது.

**ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைகளும்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குப் பல்வேறான டச்சு அறிக்கைகள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் இவ்வாய்வினால் வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமய நிலைமை தொடர்பில் விரிவான பல தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளது. அத்துடன் இவரால் கடைப்பிடிக்கப்பட்ட சமயக்கொள்கைகள் யாழ்ப்பாணப் பிராந்திய மக்கள் மீண்டும் தமது சமயத்தைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியமுடிகின்றது. இந்நிலையானது சைவசமயம் மீண்டும் புத்தெழுச்சிபெறக் காரணமாக அமைந்தது. இவ்வாய்வின் மூலம் வான்கோயன்ஸின் ஆட்சி நடவடிக்கையினால் சைவசமயத்தில் ஏற்பட்ட சாதக, பாதக அம்சங்களை அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் சைவசமயிகள் மன உறுதியுடன் சைவசமயத்தைக் கடைப்பிடித்ததை அறிந்து கொள்ள முடிகின்றது. சைவசமய வரலாற்றில் ஏற்பட்ட மாறுதல்களை அறிவதற்கு இவ்வாய்வு உதவியாக அமையும் எனலாம். இதேபோல ஒவ்வொரு ஆளுநர்கள் காலத்திலும் சைவசமயம் சார்ந்த பணிகளை டச்சு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதற்கு இவ்வாய்வு முன்னோடியாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சைவசமயமானது யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் பூர்வீகமான மதமாகக் காணப்பட்டதுடன், சைவசமய நடவடிக்கைகள் ஐரோப்பியர் காலத்தில் மிக இறுக்கமாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும் போர்த்துக்கேயர் காலத்துடன் ஒப்பிடும்போது ஒல்லாந்தர் காலத்தில் ஆளுநர்கள் சைவசமயத்தை முழுமையாக எதிர்காமையால் சைவசமயமும் அது சார்ந்த பண்பாட்டு அம்சங்களும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் மீண்டும் எழுச்சியடையக் காரணமானது. எனவே வான்கோயன்ஸ் காலத்தில் சைவசமயமானது பல சவால்களுக்கு மத்தியிலும் வளர்ச்சியடைந்துடன் அதற்கான சாதகமான நிலைமை ஆளுநர் வான்கோயன்ஸ் காலத்தில் ஏற்படுத்தப்பட்டமையும் ஆய்வின் மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

**உசாத்துணை**


Phillipus Baldaeus, (1672), A True and Exact description of the great island of Ceylon, The Ceylon historical, Journal Colombo.

Van goens, R,Jnr., (1675-1679), "memoir of RYCKLOFF van Goens, Jun, Governor of ceylon, to his successor, laurens PYL, late Commandeur, Jaffna Patnam.

Selection from the dutch records of the Ceylon government no – 03 memolrsof Ryckloff van goens

Hendrick Zwaardecroon, (1911), Memoir of Hendrick Zwaardecroon.

Raymond Schwab, (1925), Mathias crismant, Libraire plon, Lanbier, Paris.

Arasaratnam.S., (1964), The Administration of the Dutch East India Company, New Jersey, Ceylon.

Tikiri Abeyasinghe, (2005), Jaffna under the Portuguese, A Stamford Lake Publication, Sri Lanka.

DeSilva,K.M., (1981), A History of Srilanka, Oxford University Press, Oxford.

பத்மநாதன்.சி., (2002), இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், சென்னை.

குணசிங்கம் முருகர், (2008), இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு (கி.பி 300 – கி.பி. 2000), எம். வி. வெளியீடு, சிட்னி.